(b) if so, the details thereof?

அன்னியச் செலாவணிக் கடன்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அன்னியச் செலாவணிக் கடன் கிடைப்பது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குத் தெரிவித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) உலக வங்கியின் ஓர் உறுப்பான அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA) பல்வேறு நாட்டுச் செலாவணிகளில் 250 லட்சம் அமெரிக்க டாலருக்குச் சமமான கடன் வசதியை இந்திய அரசுக்குக் கிடைக்கச் செய்துள்ளது. தொழில் நிறுவனங்கள் (தொழில் உற்பத்திக்குரிய) மூலதனச் சாதனங்களை இறக்குமதி செய்யவும் அயல்நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களைப் பெறவும், மேற்சொன்ன அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனக் கடன் வசதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் தொழில் பிரிவுகளுக்கு அந்நியச் செலாவணிக் கடன் வழங்கப்படுகிறது. பேரவை முன் வைக்கப்பட்டுள்ள சிறுவெளியீட்டில் @ (Brochure) இத்திட்டத்தின் விவரங்கள் உள்ளன.

Sales Tax Concessions

† 227 *Q.*—THIRU A. AYYANAN AMBALAM (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to grant Sales Tax concessions to Small Scale Industry Units as a form of incentive; and

(*b*) if not, the reasons therefor?

@ அச்சடிக்கப்படவில்லை.

27—3—1974 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

1974 மார்ச் 29]

விற்பனை வரிச் சலுகைகள்

திரு. அ. அய்யணன் அம்பலம் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறு தொழில் பிரிவுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விற்பனை வரிச் சலுகைகள் அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) விற்பனை வரி குறித்த பொறுப்புகளை நிறைவேற்றவும், சிறு தொழில்களுக்கு மூலதனத்தைத் திரட்டுவதில் உதவவும், வட்டியில்லாக் கடன் தொகைகளை அளிப்பதன் மூலம் நிதிவகையில் உதவி அளிக்க விற்பனைவரி சீரமைப்பிற்கான தனி அதிகாரி பரிவுரை செய்துள்ளார். இப்பரிவுரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இவ்வினா எழுவில்லை.

Tamil Nadu Bristle Fibre Unit

* @ 228 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Bristle Fibre Unit has started marketing its products;

(*b*) if so, the details thereof;

(*c*) whether any survey has been undertaken about the market for its products; and

(*d*) if so, the details thereof?

@ 27—3—1974-ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்